கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

OS.No.102/2012

.......

தேதி 10.01.2020

பெயர் = வேண்டாமணி (வாசா.1

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

ராமதாஸ் எனது சகோதரர். அப்பாவு நாய்க்கர் எனது அப்பா. அப்பாவு நாய்க்கருக்கு கூட்டு குடும்ப சொத்து எவ்வளவு இருந்தது என்றால் 3 ½ ஏக்கர் சொந்தமானது. அப்பாவு நாய்க்கரின் 3 ½ ஏக்கர் நிலங்களின் சர்வே எண்கள் என்ன என்றால் தெரியாது. இந்த வழக்கின் விவரங்களை வழக்கறிருக்கு நான் தான் சொன்னேன். வழக்கின் சில சொத்துகள் எனது அப்பாவுடையது என்று சொல்லியுள்ளேன் என்ன என்ன சொத்துகள் என் அப்பாவுடையது என்றால் சர்வே எண் தெரியாது. வழக்கு சொத்துகள் 1ம் பிரதிவாதி ராமதாஸ் பெயரில் பத்திரங்கள் உள்ளது என்றால் சரியல்ல. என் பெயரிலுள்ள சொத்து எந்த ஆண்டு விற்கப்பட்டது என்றால் விற்கவில்லை. என் அப்பாவிற்கு சொந்தமான சொத்துகள் நஞ்சை வகையை சேர்ந்தது. வானபார்த்த பூமி தான் அதாவது புஞ்சை தான். என் அப்பா சொத்திற்கு ஏரி பாய்ச்சல் கிடையாது பம்பு செட் பாய்ச்சல் கிடையாது.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)